**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

**அசல் வழக்கு எண். 233/2023**

பெயர் : வினோத்குமார் (PW2)

த/க/பெ. :

தேதி : 17.10.2024

சாட்சி நீதிமன்றம் ஆஜராகி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

சாட்சி சான்றாவணம் 1 ல் 1795 ச.மீ என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன் பின் புறம் வரைபடம் உள்ளது. பட்ட எண். 204 எந்த அடிப்படையில் பழனிச்சாமிக்கு வழங்கப்பட்டது என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான். அதன் பழைய புல எண். 134/1A பா. சொத்து ஏற்கனவே குன்றக்குடி மடத்திற்கு சொந்தமானது என்றால் அது பற்றி தெரியாது. சாட்சி சான்றாவணம் 1ன் அடிப்படையில் தான் சாட்சி சான்றாவணம் 2 முதல் 8 வரை வழங்கப்ட்டுள்ளது என்றால் சரிதான். சாட்சி சான்றாவணம் 1 ஆவண அடிப்படையில் பட்டா வழங்கப்ட்டதா அல்லது அனுபவ அடிப்படையில் வழங்கப்பட்டதா என்று சொல்ல இயலாது. வா.சா.ஆ. 1 ஆவணம் பழனிச்சாமி பெயரில் உள்ளது என்றால் சரிதான். அதுவும் பட்டா என் 204 என்றால் சரிதான். அதில் 624 ச.மீ பட்டா வழங்கப்ட்டதாக உள்ளது. அந்த ஆவண பின் புறத்தில் வரைபடம் எதுவும் இல்லை. வா.சா.ஆ. 1 சொத்தில் வீடு உள்ளதா காலி மனையா என்பது தெரியவில்லை. சாட்சி சான்றாவணம் 2 முதல் 8 வரை சொத்தில் வீடு உள்ளதா காலி மனை உள்ளதா என்று சொல்ல இயலாது. நான் ஆவணங்களின் அடிப்படையில் அந்தந்த நபர்கள் மீது பதிவாகி உள்ளது குறித்து தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் அனுபவம் குறித்து என்னால் கூற இயலாது என்றால் சரிதான். என்ன பரிகாரத்திற்கு வாதி இந்த வழக்கு போட்டுள்ளார் என்று தெரிந்துகொள்ளவில்லை. ஆவண சொத்திற்குபின் புறம் பூங்கொடி, பூங்குழலி, சிட்டிபாபு, மரகதம், ஞானம் ஆகியோர்கள் வீடு உள்ளது என்றால் அது குறித்து தெரியவில்லை. சாட்சி சான்றாவணம் 1 முதல் 8 வரை சொத்துகளுக்கு புல வரைபடம் அ பதிவேடு உள்ளது என்றால் சரிதான். நீதிமன்ற அழைப்பாணை வந்தால் அவற்றை ஆஜர் செய்ய தயாராக உள்ளேன். நத்தம் வகைபாடு மனைக்கு வீடு கட்டி குடியிருந்தால் மட்டுமே பட்டா வழங்கப்படும் என்றால் சரிதான். அவ்வாறு வழங்கப்படும் பட்டா 3-4 செண்டிற்கு மட்டும் வழங்கப்படும் என்றால் சரிதான். 624 ச.மீ. பட்டா வழங்கப்பட்டல் அதற்குறிய பதிவு

செய்யப்பட்ட ஆவணம் இருக்க வேண்டும் என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கு வாதியிடம் பதிவு செய்யப்பட்ட ஆவணம் உள்ளதா என்பது குறித்து தெரிந்து கொள்ளவில்லை. சாட்சி சான்றவாணம் 1 நத்தம் நிலவரி திட்டத்தின் கீழ் வழங்கப்ட்டது என்றால் செல்லும் தன்னை கேள்விக் குறியானது என்றாலும் பல இடங்களில் அரசால் ரத்து செய்யப்பட்டது என்றாலும் அது குறித்து தெரியவில்லை. சாட்சி சான்றவாணம் 1 சட்டபடி செல்லகூடியது அல்ல அதன் அடிப்படையில் எவ்வவித உரிமையும் கோர இயலாது என்றால் சரியல்ல. நான் தாவா கிராமத்தில் 12.07.2024 ல் இருந்து கிராம நிர்வாக அலுவலராக உள்ளேன்.